PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி



தொகுதி - 6 | நாளிதழ் | 4 பக்கங்கள் சென்னை, 2 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 113

உறுப்பு மாற்று சிகிச்சை செய்தவர்கள் பங்கேற்ற விளையாட்டுப் போட்டி: குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்

சென்னை – 2 நவம்பர், 2026 குடியரசு துணைத்தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று (01.11.2026) புது தில்லியில் உள்ள தல்கதோரா மைதானத்தில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்கள் பங்கேற்ற தேசிய விளையாட்டுப் போட்டிகள் 2026-ஐத் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய குடியரசு துணைத்தலைவர், இந்த விளையாட்டுப் போட்டிகளைத் துணிச்சல், உறுதிப்பாடு, கருணை, வாழ்வின் விலைமதிப்பற்ற கொடை ஆகியவற்றின் கொண்டாட்டம் என்று விவரித்தார். இந்த முக்கியமான முயற்சிக்காக, சிறுநீரகப் பராமரிப்பு அறக்கட்டளை, சர் கங்கா ராம் மருத்துவமனை, சுகாதார அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை அமைப்பு ஆகியவற்றுக்கு அவர் வாழ்த்து தெரிவித்தார்.

தன்னலமற்ற சேவை எனும் இந்தியாவின் நாகரிக நெறியை அவர் எடுத்துரைத்தார். உறுப்பு தானத்தை ஒரு 'மகாதானம்' என்று அவர் விவரித்தார். அதன் மூலம் இழப்பைச் சந்திக்கும்போதும் நம்பிக்கை நிலைத்திருக்கும் என்று அவர் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது 'மனதின் குரல்' உரைகள் மூலம் இந்த விஷயத்திற்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருவதால், இந்தியாவில் உறுப்பு தான இயக்கம் குறிப்பிடத்தக்க உத்வேகத்தைப் பெற்றுள்ளது என்று குடியரசு துணைத்தலைவர் குறிப்பிட்டார்.

இந்த விளையாட்டுப் போட்டிகள், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை பெறுபவர்களின் மீள்திறனைக் கொண்டாடுவதாகவும், நவீன மருத்துவத்தின் சக்தியை வெளிப்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

சண்டிகர் காவல்துறையின் வைர விழா கொண்டாட்டம் - மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா பங்கேற்பு

சென்னை – 2 நவம்பர், 2026 மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, சண்டிகர் காவல்துறை நிறுவப்பட்டதன் வைர விழா கொண்டாட்டங்களில் இன்று (01.11.2026) கலந்துகொண்டதுடன், சண்டிகர் காவல்துறைக்கு குடியரசுத் தலைவர் வண்ணக் கொடி விருது வழங்கும் விழாவில் தலைமை விருந்தினராகவும் பங்கேற்று சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, சண்டிகர் காவல்துறைக்கு இன்று வழங்கப்பட்ட குடியரசுத் தலைவர் விருது, அதன் 60 ஆண்டுகால சேவை, அர்ப்பணிப்புக்கான அங்கீகாரம் என்று கூறினார். 1966 முதல் இன்று வரை, சண்டிகர் காவல்துறை இந்த மகத்தான நகரத்தைப் பாதுகாக்க அயராது உழைத்து, அதன் வரலாற்றில் ஒரு பொன்னான அத்தியாயத்தை எழுதியுள்ளது என்று திரு அமித் ஷா குறிப்பிட்டார்.

சண்டிகர் காவல்துறை இன்று 141 புதிய வாகனங்கள் இணைக்கப்படுவதாக திரு அமித் ஷா தெரிவித்தார். இது விரைவான செயல்பாடு, தீவிர ரோந்து, நவீன காவல் பணிகள் ஆகியவற்றை கணிசமாக வலுப்படுத்தும் என்று அவர் கூறினார்.

நாட்டிலேயே தனிநபர் அடிப்படையில் அதிக எண்ணிக்கையிலான வாகனங்களைக் கொண்ட நகரம் சண்டிகர் என்றாலும், அந்நகரம் போக்குவரத்து நெரிசல் சிக்கலை எதிர்கொள்ளவில்லை என்று திரு அமித் ஷா குறிப்பிட்டார்.

சண்டிகர் காவல்துறையின் விரைவு செயல்பாட்டு நேரம் 10 நிமிடங்கள் என்றும், ஒரு இடத்திற்குச் சென்றடைய காவல்துறை எடுத்துக்கொள்ளும் சராசரி நேரம் 4 நிமிடங்கள் என்றும் திரு அமித் ஷா கூறினார்.

7 விமான நிலையங்களில் சர்வதேச பயணங்களுக்கான டிஜி யாத்ரா சோதனை நடைமுறை தொடக்கம்

சென்னை – 2 நவம்பர், 2026 இந்தியாவின் விமானப் போக்குவரத்துத் துறையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் மேலும் ஒரு படியாக, டிஜி யாத்ரா இந்தியா முழுவதும் உள்ள 7 விமான நிலையங்களில் சர்வதேசப் பயணிகளுக்கான சோதனை நடைமுறைகளைத் தொடங்கியுள்ளது.

நவம்பர் முதல் டிசம்பர் 2026 வரை நடைபெறவுள்ள இந்தச் சோதனைகள், இ-பாஸ்போர்ட் வைத்திருக்கும் தகுதியுள்ள இந்தியக் குடிமக்கள், ஏர் இந்தியா, இண்டிகோ நிறுவனங்களால் இயக்கப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வதேச விமானங்களில் பயணிக்கும்போது, விமான நிலையங்களில் உள்ள குறிப்பிட்ட முனையங்களில் டிஜி யாத்ராவைப் பயன்படுத்த அனுமதிக்கும்.

டெல்லி, பெங்களூரு, ஹைதராபாத், கொச்சி, மும்பை, சென்னை, அமிர்தசரஸ் விமான நிலையங்களில் இந்தச் சோதனை நடைமுறைகள் நடத்தப்படுகின்றன. தகுதியுள்ள பயணிகள், தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் உள்ள முனைய நுழைவாயில்கள், பாதுகாப்பு சோதனைப் பகுதிகள் ஆகிய இடங்களில் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். சோதனைக் காலத்தில் பெறப்படும் கருத்துகள், 2027-ல் இதை விரிவாகச் செயல்படுத்துவதற்கான திட்டமிடலுக்கு வழிகாட்டும்.

இந்த வசதியானது, தற்போதுள்ள பயண நடைமுறைகளுக்கு மாற்றாக அல்லாமல், அவற்றிற்குத் துணையாகவே அமைக்கப்பட்டுள்ளது. பயணிகள் தொடர்ந்து தங்கள் பயண ஆவணங்களை உடன் வைத்திருக்க வேண்டும். விமான நிறுவனத்தின் கட்டாய ஆவணச் சரிபார்ப்புகள், குடிவரவு நடைமுறைகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

பெங்களூரு - மும்பை இடையேயான படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயில், போக்குவரத்து இணைப்பிற்குப் பெரும் ஊக்கமளிக்கும் - பிரதமர் திரு நரேந்திர மோடி

பெங்களூரு – 2 நவம்பர், 2026 பெங்களூரு – மும்பை வந்தே பாரத் படுக்கை வசதி கொண்ட ரயில் சேவை, ரயில் போக்குவரத்து இணைப்பிற்கு ஒரு பெரிய ஊக்கம் அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி எடுத்துரைத்துள்ளார். வந்தே பாரத் படுக்கை வசதி கொண்ட ரயில், பெங்களூரு - மும்பை இடையேயான இணைப்பிற்கு மற்றொரு குறிப்பிடத்தக்க உந்துதலை அளிப்பதாகவும், பயணத்தை மேலும் வசதியாக்கி, மாநிலங்களுக்கு இடையேயான இணைப்பை மேம்படுத்துவதாகவும் உள்ளதாக திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். இந்தச் சேவை கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் உள்ள மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்கள், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள், மாணவர்கள் ஆகியோருக்குப் பயனளிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

"மேம்பட்ட ரயில் இணைப்பை நோக்கிய மற்றுமொரு படி. அதுவும் தொழில்நுட்பம், புதுமைகளின் நகரமான பெங்களூருவிலிருந்து!

வந்தே பாரத் படுக்கை வசதி கொண்ட ரயில், பெங்களூரு - மும்பை இடையேயான இணைப்பில் ஒரு திருப்புமுனையாக அமையும்.

இந்த ரயில் கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்குப் பயனளிக்கும். குறிப்பாக இளைஞர்கள், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள், மாணவர்களுக்கு இது பெரிதும் பயனளிக்கும்."

பூடானில் 108 ஸ்தூபிகள் நிர்மாணிக்கும் நிகழ்வில் மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு பங்கேற்பு

சென்னை – 2 நவம்பர், 2026 இன்று (2026 நவம்பர் 01) பூடானில் அந்நாட்டு மன்னர் தலைமையில் நடைபெற்ற, பூடானின் கெலெபு மைண்ட்ஃபுல்னஸ் சிட்டி பகுதியில் 108 ஸ்தூபிகளை (புனித மாடங்கள்) எழுப்பி புனிதப்படுத்தும் விழாவில், இந்திய அரசின் சார்பில் மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கலந்துகொண்டார். இந்த 108 ஸ்தூபிகள் நிகழ்வில் திரு ரிஜிஜு கலந்துகொண்டது, இந்தியா - பூடான் மக்களின் பகிரப்பட்ட ஆன்மீக, கலாச்சாரப் பிணைப்புகளையும், நெருங்கிய நட்பையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது.

108 ஸ்தூபிகள் திட்டமானது, பூடான் மன்னரால் முன்மொழியப்பட்டு, அதன் செயலாக்கத்திற்கும் அவரே வழிகாட்டினார். ஒரே நாளில், ஆயிரக்கணக்கான தன்னார்வலர்கள், அசாம் எல்லையருகே உள்ள கெலெபு மைண்ட்ஃபுல்னஸ் சிட்டியில், ஆற்றங் கரையோரம் 11.7 கிலோமீட்டர் நீளத்திற்கு, தலா 15 மீட்டர் உயரமும் 108 மீட்டர் இடைவெளியும் கொண்ட 108 ஸ்தூபிகளை எழுப்பினர். இத்திட்டமானது, கெலெபு மைண்ட்ஃபுல்னஸ் சிட்டியை வஜ்ரயான பௌத்தத்தின் ஒரு முக்கிய மையமாக முன்னிறுத்துவதையும், அதே சமயம் பூடான் மக்களின் விழுமியங்களையும் கலாச்சாரத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

கெலெபு மைண்ட்ஃபுல்னஸ் சிட்டி தொடர்பான தொலைநோக்குத் திட்டத்திற்கும், பூட்டானுடன் இணைந்து இந்தியாவின் எல்லைப் பகுதிகளை மேம்படுத்துவதில் அதன் பங்கிற்கும் இந்தியாவின் ஆதரவை திரு கிரண் ரிஜிஜு மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உச்சிமாநாட்டை நாளை புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார் பிரதமர் திரு நரேந்திர மோடி

சென்னை – 2 நவம்பர், 2026 பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை (2026 நவம்பர் 2), புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில், மாலை சுமார் 4:30 மணியளவில் இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உச்சிமாநாட்டையும் கண்காட்சியையும் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

இந்த நான்கு நாள் உச்சிமாநாடு 2026 நவம்பர் 5 வரை நடைபெறும். இந்த உச்சிமாநாட்டின் கருப்பொருள் 'முதலீடு செய்யுங்கள், புதுமையைப் புகுத்துங்கள், ஊக்கமளியுங்கள்' என்பதாகும்.

இந்த உச்சி மாநாட்டில், 40-க்கும் மேற்பட்ட அமைச்சர்கள், கொள்கை வகுப்பாளர்கள், முதலீட்டாளர்கள், நிதி நிறுவனங்கள், தொழில்துறைத் தலைவர்கள் உட்பட 130-க்கும் மேற்பட்ட நாடுகளின் பங்கேற்பாளர்கள் கலந்து கொள்கின்றனர். இது தூய்மையான எரிசக்தி முதலீடு, தொழில்துறை ஈடுபாடு, தொழில்நுட்ப ஒத்துழைப்புகள் ஆகியவற்றுக்கான ஒரு உலகளாவிய தளமாகச் செயல்படும். ஆஸ்திரேலியா, டென்மார்க், ஐரோப்பிய யூனியன், பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து, நார்வே, சுவீடன், இங்கிலாந்து ஆகிய நாடுகள் கூட்டு ஒத்துழைப்பு நாடுகளாக இதில் பங்கேற்கின்றன.

ஆந்திரப் பிரதேசம், அசாம், பீகார், சத்தீஸ்கர், தில்லி, குஜராத், கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய 13 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் தங்களின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல், முதலீட்டு வாய்ப்புகள், உற்பத்தித் திறன்களை இதில் வெளிப்படுத்தவுள்ளன.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
பொது இ-சேவை மையம்

*மெகாஸ்டார் சிரஞ்சீவி கிளாப்ஸ் அடிக்க, மெகா பவர் ஸ்டார் ராம் சரண் மற்றும் இயக்குநர் சுகுமார் மீண்டும் இணைந்துள்ள

சென்னை – 2 நவம்பர், 2026 *மெகாஸ்டார் சிரஞ்சீவி கிளாப்ஸ் அடிக்க, மெகா பவர் ஸ்டார் ராம் சரண் மற்றும் இயக்குநர் சுகுமார் மீண்டும் இணைந்துள்ள பிரம்மாண்டமான புதிய திரைப்படம் பூஜையுடன் தொடங்கியது!* மெகா பவர் ஸ்டார் ராம் சரண் மற்றும் மாஸ்டர் ஸ்டோரி டெல்லர் சுகுமார் மீண்டும் இணையும் பெரிதும் எதிர்பார்க்கப்படும் #RC17 # RC2Sukku திரைப்படம் இன்று தொடங்கியது. மைத்ரி மூவி மேக்கர்ஸ், சுகுமார் ரைட்டிங்ஸ் மற்றும் டி-சீரிஸ் இணைந்து தயாரிக்கும் இந்தப் பிரம்மாண்ட பான் இந்தியா திரைப்படத்தின் பூஜை ஹைதராபாத்தில் இன்று நடைபெற்றது. இதில் திரையுலகைச் சேர்ந்த பல முக்கியப் பிரபலங்கள் கலந்து கொண்டனர். இந்த விழாவில் மெகாஸ்டார் சிரஞ்சீவி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு கிளாப்ஸ் அடித்தார். மேலும், தில் ராஜுவுடன் இணைந்து படத்தின் திரைக்கதையைப் படக்குழுவினரிடம் வழங்கினார். டி-சீரிஸ் நிறுவனத்தின் பூஷன் குமார் கேமராவை இயக்கி படப்பிடிப்பைத் தொடங்கி வைத்தார். விழாவில் பங்கேற்ற இயக்குநர்கள் முதல் காட்சியை இயக்கினர். ராம் சரண், சுகுமார் கூட்டணியில் இதற்கு முன்பு வெளியான 'ரங்கஸ்தலம்' திரைப்படம் தெலுங்கில் பெரும் வெற்றி பெற்றது. தற்போது மீண்டும் இருவரும் இணைந்துள்ளதால், இந்த புதிய படத்தின் மீதான எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது. நடிகர் ராம் சரணை இதுவரை பார்த்திராத வித்தியாசமான தோற்றத்தில் திரையில் காட்டவுள்ளார் இயக்குநர் சுகுமார். நவீன் யெர்னேனி, ஒய். ரவிசங்கர், விஜய பிரசாத் பண்ட்ரெட்டி மற்றும் பூஷன் குமார் ஆகியோர் பிரம்மாண்ட பொருட்செலவில்



இப்படத்தைத் தயாரிக்கின்றனர். பான் இந்தியா அளவில் மிகப்பெரிய பொழுதுபோக்குத் திரைப்படமாக இதனை உருவாக்கப் படக்குழு திட்டமிட்டுள்ளது. இப்படத்தின் அறிவிப்பு போஸ்டரில் நீலம், பச்சை மற்றும் தங்க நிறங்களின் கலவையில் அழகிய மயில் தோகை இடம்பெற்றுள்ளது. அதில் ராம் சரணின் முகம் இணைக்கப்பட்டுள்ளது. வித்தியாசமாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த போஸ்டர் வெள்ளை நிறப் பின்னணியில் தனித்துவமாகக் காட்சியளிக்கிறது. மேலும், படக்குழு வெளியிட்டுள்ள 'யூகேன் இமேஜின்' என்ற வாசகம், இந்தப் படத்தின் மீது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. படத்தின் மற்ற நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் குறித்த அறிவிப்புகள் விரைவில் வெளியாகும்.

தொழில்நுட்பக் குழு விவரம்: கதை, திரைக்கதை, இயக்கம்: சுகுமார், தயாரிப்பு நிறுவனங்கள்: மைத்ரி மூவி மேக்கர்ஸ், சுகுமார் ரைட்டிங்ஸ் மற்றும் டி-சீரிஸ், தயாரிப்பாளர்கள்: நவீன் யெர்னேனி, ஒய். ரவிசங்கர், விஜய பிரசாத் பண்ட்ரெட்டி, பூஷன் குமார், மக்கள் தொடர்பு: வம்சி-சேகர், மாதுரி மது, மார்க்கெட்டிங்: ஃபர்ஸ்ட் ஷோ

ஐக்கிய ஜனதா தளம் வேட்பாளர்களை வீழ்த்திய 2 சுயேச்சை எம்எல்சிக்கள் பீகாரில் ஆளும் பாஜக கூட்டணியில் விரிசல்?

சென்னை – 2 நவம்பர், 2026 பீகார் சட்ட மேலவை தேர்தலில் ஐக்கிய ஜனதா தளம் வேட்பாளர்களை வீழ்த்திய 2 சுயேச்சை உறுப்பினர்கள் பாஜகவில் இணைந்ததால் ஆளும் கூட்டணியில் பெரும் மோதல் வெடித்துள்ளது. பீகாரில் முதல்வர் நிதிஷ்குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம் மற்றும் பாஜக இணைந்த தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது.

இந்த சூழலில், அங்கு சமீபத்தில் 2 சட்ட மேலவை தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. இதில் சரண் ஆசிரியர் தொகுதியில் ஐக்கிய ஜனதா தள வேட்பாளர் ஆனந்த் புஷ்கரை எதிர்த்து போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர் ராகுல் ராஜ் வெற்றி பெற்றார். இதேபோல் திர்கத் பட்டதாரி தொகுதியில் போட்டியிட்ட ஐக்கிய ஜனதா தள வேட்பாளர் அபிஷேக் ஜாவை தோற்கடித்து சுயேச்சை வேட்பாளர் பன்ஷிதர் பிரிஜ்வாசி வெற்றி வாகை சூடினார். இவ்வாறு ஆளும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை வீழ்த்திய இந்த 2 சுயேச்சை உறுப்பினர்களும், முதல்வர் சாம்ராட் சவுத்ரியை நேரில் சந்தித்து நேற்று முறைப்படி பாஜகவில் ஐக்கியமாகினர்.

இந்த விவகாரம் ஆளும் கூட்டணியில் கடும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் களத்தில் கூட்டணி தர்மத்தை பாஜக தலைவர்கள் காற்றில் பறக்கவிட்டு விட்டதாக ஐக்கிய ஜனதா தள வேட்பாளர் ஆனந்த் புஷ்கர் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதள பக்கத்தில், 'பாஜக தலைவர்கள் தங்களுக்கு வாக்கு சேகரிக்கும் போது மட்டும் தான் கூட்டணி தர்மம் நினைவுக்கு வருமா? எங்கள் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு தேவைப்படும் போது அந்த உறுதிப்பாடு எங்கே போனது? சரண் தொகுதியில் பாஜக எம்.பி. ராஜீவ் பிரதாப் ரூடி மற்றும் மோதிகாரி தொகுதி பாஜக எம்.பி. ராதா மோகன் சிங் ஆகியோர் கூட்டணி வேட்பாளருக்காக முறையாக களப்பணியாற்றவில்லை. சுயேச்சை வேட்பாளரை வாபஸ் பெற வைப்பதாக அளித்த வாக்குறுதியையும் பாஜகவினர் காப்பாற்றாமல் துரோகம் இழைத்து விட்டனர்' என்று ஆவேசமாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பள்ளி ஆசிரியர்களை சந்தித்து வாக்கு சேகரிக்க வேண்டும் என்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் முடிவை பாஜக எம்.பி.க்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் திட்டமிட்டே புறக்கணித்ததாகவும், இதன் பின்னணியில் முன்கூட்டியே வகுக்கப்பட்ட அரசியல் சதி இருப்பதாகவும் அவர் சந்தேகம் எழுப்பியுள்ளார். அதே சமயம், முதல்வர் நிதிஷ்குமாரின் தலைமையின் கீழ் தொடர்ந்து விசுவாசத்துடன் பணியாற்றுவேன் என உறுதியளித்த ஆனந்த் புஷ்கர், களத்தில் உழைக்கும் அடிமட்ட கூட்டணி தொண்டர்களின் அர்ப்பணிப்புக்கு தேசிய ஜனநாயக கூட்டணியில் மரியாதை உள்ளதா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். கூட்டணி வேட்பாளர்களை தோற்கடித்த 2 சுயேச்சைகளை பாஜக உடனடியாக தன்பக்கம் இழுத்துள்ள இந்த நடவடிக்கை, பீகார் ஆளும் கூட்டணியில் பெரும் விரிசலையும் அரசியல் புயலையும் கிளப்பியுள்ளது.

மக்களின் நடைபாதை ஆக்கிரமிப்பு; உணவு டெலிவரி ரோபோவை வழிமறித்த 78 வயது பேராசிரியை கைது: போராட்டம் தொடரும் என எச்சரிக்கை

சென்னை – 2 நவம்பர், 2026 நடைபாதையை இயந்திரங்கள் ஆக்கிரமிப்பதை எதிர்த்து உணவு டெலிவரி செய்யும் ரோபோக்களை தொடர்ந்து வழிமறித்து போராட்டம் நடத்திய 78 வயது ஓய்வுபெற்ற பெண் பேராசிரியை கைது செய்யப்பட்டார். அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் தகவல் தொடர்பியல் பேராசிரியையாக பணியாற்றி ஓய்வுபெற்றவர் கரோலின் மார்வின் (78). அந்நாட்டின் பிலடெல்பியா நகரில் உபெர் ஈட்ஸ் நிறுவனத்தின் தானியங்கி உணவு டெலிவரி ரோபோக்கள் நடைபாதைகள் மற்றும் சாலைகளில் பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

இந்த ரோபோக்கள் ஏழை விநியோக ஊழியர்களின் வாழ்வாதாரத்தைப் பறிப்பதாகவும், நடைபாதைகளை ஆக்கிரமித்து கேமராக்கள் வழியே மக்களின் தனிநபர் சுதந்திரத்தைப் பறிப்பதாகவும் கடுமையான விமர்சனங்கள் எழுந்து வந்தன. இந்நிலையில், கடந்த 14ம் தேதி வீதிக்கு வந்த பேராசிரியர் கரோலின் மார்வின், நடைபாதையில் சென்ற டெலிவரி ரோபோவின் முன்பாக சுமார் 15 நிமிடங்கள் நின்று அதன் பயணத்தை மறித்துப் போராடினார்.

தகவல் அறிந்து அங்கு வந்த போலீசார், பொது ஒழுங்குக்கு பங்கம் விளைவித்ததாகக் கூறி கரோலினை கைது செய்தனர். எனினும் இந்த நடவடிக்கைக்கு அஞ்சாத அவர், 'ரோபோவை விட எனக்கு அதிக உரிமை இருப்பதாக நம்புகிறேன்; நான் மனிதர்களைத் தடுக்கவில்லை, ஆக்கிரமிப்பு இயந்திரத்தைத்தான் தடுத்தேன்; பெருநிறுவனங்கள் நமது பொதுவெளியை ஆக்கிரமிப்பதை எதிர்த்து எனது போராட்டம் மீண்டும் தொடரும்' என்று சூளுரைத்துள்ளார்.

அரசுப்பணியாளர் தேர்வாணைய தேர்வுகள் மாவட்ட ஆட்சியர் விஷ்ணு மகாஜன், பார்வையிட்டார்.

சென்னை – 2 நவம்பர், 2026

•••••••••••••••••••••••••••••••

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட ஹோலிகிராஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளியில் இன்று (01.11.2026), தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி II & IIA நடைபெற்றுவரும் தேர்வுகள் மையத்தினை மாவட்ட ஆட்சியர் திரு.விஷ்ணு மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் திரு.விஷ்ணு மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில்:-

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி II & IIA தேர்வுகள் தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், கோவில்பட்டி ஆகிய நான்கு வட்டங்களில் மொத்தம் 47 தேர்வு மையங்களில் 12537 தேர்வாளர்கள் விண்ணப்பித்து 10393 தேர்வாளர்கள் தேர்வு எழுதுகின்றனர். 2204 (17%) தேர்வாளர்கள் தேர்வு எழுதவில்லை. இத்தேர்வு பணிக்கென துணை வட்டாட்சியர் நிலையில் 12 இயங்கு குழுக்களும் (Mobile Team), துணை ஆட்சியர் நிலையில் 4 கண்காணிப்பு அலுவலர்களும், 5 பறக்கும் படையும் அமைக்கப்பட்டுள்ளது.



தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட ஹோலிகிராஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளியில் இன்று (01.11.2026), தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி II & IIA நடைபெற்றுவரும் தேர்வுகள் மையத்தினை மாவட்ட ஆட்சியர் திரு.விஷ்ணு மகாஜன், இ.ஆ.ப, அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேற்படி தேர்விற்காக தேர்வர்கள் தேர்வு மையங்களுக்கு எளிதாக சென்றடையும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மூலம் கூடுதலாக சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளது. தேர்வு நடைபெறும் மையங்களில் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் திரு.விஷ்ணு மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி வட்டாட்சியர் திரு.திருமணி ஸ்டாலின் உடனிருந்தனர்.

வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி

சூர்யாவின் 'சீன்' பட இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா கோலாகலம்!

சென்னை – 2 நவம்பர், 2026 நவம்பர் 6-ம் தேதி தீபாவளி வெளியீடாக உலகம் முழுவதும் திரைக்கு வரும் நடிகர் சூர்யாவின் 'சீன்' திரைப்படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இயக்குநர் ஜித்து மாதவன் இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படத்தில் சூர்யா, நஸ்ரியா நஜீம், நஸ்லென், ஆனந்தராஜ், லால், ராஜ் பிரியன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். வினீத் அகஸ்டியன் ஒளிப்பதிவு செய்ய, சுஷின் ஷ்யாம் இசையமைத்துள்ளார். 2D என்டர்டெய்ன்மென்ட் மற்றும் ழகரம் ஸ்டுடியோஸ் சார்பில் சூர்யா – ஜோதிகா இணைந்து தயாரித்துள்ளனர்.

விழாவில் நடிகர்கள் சிவகுமார், கார்த்தி உள்ளிட்ட திரையுலகப் பிரபலங்கள் கலந்து கொண்டனர். இயக்குநர் ஜித்து மாதவன் வித்தியாசமான கதை மற்றும் நகைச்சுவை கலந்த திரைக்கதையுடன் படத்தை உருவாக்கியுள்ளதாக படக்குழுவினர் தெரிவித்தனர்.

நடிகர் கார்த்தி, சூர்யாவின் நடிப்பையும் ஜித்து மாதவனின் தனித்துவமான இயக்கத்தையும்



பாராட்டினார். நடிகை நஸ்ரியா, 12 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழில் நடித்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாகக் குறிப்பிட்டார். நடிகர் நஸ்லெனுக்கும் இது முதல் தமிழ்ப் படமாகும்.

நடிகர் சூர்யா பேசுகையில், ரசிகர்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி தெரிவித்ததுடன், இயக்குநர் ஜித்து மாதவனின் வித்தியாசமான படைப்புலகம் இப்படத்திலும் இடம்பெற்றுள்ளதாகக் கூறினார். ரசிகர்கள் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் திரையரங்கிற்கு வந்து படத்தை ரசிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நகைச்சுவை, ஆக்ஷன், திரில்லர் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த 'சீன்' திரைப்படம் நவம்பர் 6-ம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.

Oasis Grace
Engineering Projects Pvt Ltd

Build Your Future With Us

25+ Locations
450+ Employees
500+ Projects
20+ Years of Excellence

What We Do

- Project Management
- Residential Construction
- Commercial Construction
- Industrial & Factory Construction
- Structural Design
- Architectural Design
- PEB and HVAC Works

In 2013 Oasis Grace extended its operations to India with a goal of bringing international construction practices to India.

RTN.DR.R.SATHYANARAYANAN, Director - Business Development
+91 9360136897 / +91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in | business@jmrgroup.org

Printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers, No.191, 212, Khaja Khan Bhandar Street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
Editor: R.SATHYANARAYANAN

தூத்துக்குடி மாவட்ட உள்ளாட்சி தினத்தின் கிராமசபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் விஷ்ணு மகாஜன்



தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நட்டாத்தி ஊராட்சியில் இன்று (01.11.2026), உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திரு.விஷ்ணு மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். உடன் திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.கௌதம் அவர்கள் உள்ளார்.

சென்னை – 2 நவம்பர், 2026

உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திரு.விஷ்ணு மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டார்

தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நட்டாத்தி ஊராட்சியில் இன்று (01.11.2026), உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திரு.விஷ்ணு மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டார்.

இக்கிராம சபை கூட்டத்தில் கூட்டப் பொருள்களாக, கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்தும் (01.04.2026 முதல் 31.10.2026 வரை), கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை குறித்தும், ஊரப்பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்தும், தமிழ்நாடு கிராம மேம்பாடு மாற்றம் மற்றும் மறுமலர்ச்சி முன்னெடுப்பு, குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் முறையைத் தடுத்தல், தமிழ்நாடு பல்லுயிர் வாரியம் -பல்லுயிர் மேலாண்மைக்குழு குறித்தும், இழிவு தரும் சாதிப்பெயர்களை மாற்றம் செய்தல், வளர்ப்பு பிராணிகளுக்கு ரேபிஸ் தடுப்பூசி செலுத்துதல், தெருநாய்களுக்கு கருத்தடை மற்றும் தடுப்பூசி செலுத்துதல், சபாசார் வலைத்தளம் உள்ளாட்சிகள் தின கிராம சபைக்கூட்டம் குறிப்பு(2026), தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கிராம சபா கூட்டப்பொருள் மற்றும் இதர கூட்டப் பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவிக்கையில் தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட நட்டாத்தி கிராமத்தில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு நடைபெறும் சிறப்பு கிராம சபை கூட்டத்தில் பங்கேற்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். உள்ளாட்சி தினம் என்பது ஜனநாயகத்தின் முக்கியமான தினமாகும். ஏனென்றால் கடைக்கோடி மக்களும் தங்களுடைய கிராமத்தில் தேவைகளை நிவர்த்தி செய்யும் கூட்டம் கிராம சபை கூட்டமாகும். ஆகவே பொதுமக்கள் அனைவரும் இதுபோன்ற கிராம சபைகளில் கண்டிப்பாக பங்கேற்று தங்களின் கிராமங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்து கூட்டத்தில் விவாதிக்க வேண்டும் அவ்வாறு விவாதிக்கும் பொழுது உங்கள் கிராமத்திற்கு தேவையான அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்ய முடியும்.

மேலும் பொதுமக்கள் தங்கள் குழந்தைகளை உயர்கல்வி வரை படிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருவதை உறுதி செய்திட வேண்டும். இடை நீற்றல் குழந்தைகள் இருந்தால் தக்க அறிவுரை வழங்கி பள்ளியில் சேர்த்திட வழிமுறை செய்திட வேண்டும். தற்போது பள்ளிக்கல்வித்துறை மற்றும் இதர துறைகள் மூலம் 100 க்கு மேற்பட்ட மாணவர்களே பள்ளிக்கு வருவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு உள்ளோம். தங்கள் குழந்தைகளை செல்போன் பயன்பாட்டை தவிர்த்து நூலகத்திற்கு அழைத்துச் சென்று புத்தகங்களை படிக்க வழிகாட்டுங்கள்.

தொடர்ந்து டெங்கு போன்ற காய்ச்சல்களை வருவதை கட்டுப்படுத்த பொதுமக்கள் டெங்கு கொசு உற்பத்தியாகும் பழைய டயர் தேங்காய் சிரட்டை, தண்ணீர் தொட்டி திறந்து வைத்தல் ஆகியவற்றினை தவிர்த்து பாதுகாத்திட வேண்டும். சுகாதாரத் துறை வழிகாட்டுதலால் டெங்கு பாதிப்பு குறைந்துள்ளது. மேலும், 14 வயதிற்கு மேற்பட்ட தங்கள் குழந்தைகளை HPV தடுப்பூசி செலுத்துவதை உறுதி செய்திட வேண்டும். மகளிர் சுய உதவி குழுக்கள் சிறப்பாக தொழில்கள் செய்து வருகிறார்கள். மேலும் அவர்களின் தொழில்களை மேம்படுத்தும் வகையில் 400 மகளிர் சுய உதவி குழுக்கள் தேர்வு செய்து அவர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்குவதற்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் செய்யப்படவுள்ளது.

மக்களின் கோரிக்கைகளை தீர்வு காண்பதில் மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது. 24 மணி நேரமும் உங்களின் கோரிக்கைகளை தீர்வு காண்பது எங்களின் கடமை. மேலும் இக்கூட்டத்தில் பல்வேறு கோரிக்கைகள் எடுத்து கூறினீர்கள். குறிப்பாக பட்டா அரசு விதிமுறைகளுக்கேற்ப பட்டா வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நியாய விலைக் கடைக்கான கட்டடம் தேவைகளை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்களிடம் ஆலோசிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்றும் இதர பொதுவான கோரிக்கைகளை அரசு விதிமுறைகளுக்கு ஏற்ப தகுதியான மனுக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொது மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது என மாவட்ட ஆட்சியர் திரு.விஷ்ணு மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் குறித்து அமைக்கப்பட்டுள்ள அரங்கினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டார்.

பின்னர் சிறப்பாக பணியாற்றிய தூய்மை காவலர்களை கௌரவப்படுத்தியும் 2026-27 நிதியாண்டில் முழுமையாக வரி செலுத்தியமைக்காக மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசுகள் வழங்கி கௌரவித்தார்.

தொடர்ந்து, மகளிர் திட்டம் சார்பில் 7 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2.20 இலட்சம் மதிப்பில் வங்கிக் கடன் உதவியும், வேளாண்மை துறை சார்பில் 2 விவசாயிகளுக்கு தூயமல்லி நெல் விதை, உயிர் உரங்களும் , தோட்டக்கலைத்துறை சார்பில் 4 பயனளிகளுக்கு தென்னங்கன்றுகள், பழசெடி தொகுப்பு என 13 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் செயற் பொறியாளர் ஊரக வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்களிடம் ஆலோசிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்றும் இதர பொதுவான கோரிக்கைகளை அரசு விதிமுறைகளுக்கு ஏற்ப தகுதியான மனுக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொது மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது என மாவட்ட ஆட்சியர் திரு.விஷ்ணு மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் குறித்து அமைக்கப்பட்டுள்ள அரங்கினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டார்.

பின்னர் சிறப்பாக பணியாற்றிய தூய்மை காவலர்களை கௌரவப்படுத்தியும் 2026-27 நிதியாண்டில் முழுமையாக வரி செலுத்தியமைக்காக மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசுகள் வழங்கி கௌரவித்தார்.

தொடர்ந்து, மகளிர் திட்டம் சார்பில் 7 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2.20 இலட்சம் மதிப்பில் வங்கிக் கடன் உதவியும், வேளாண்மை துறை சார்பில் 2 விவசாயிகளுக்கு தூயமல்லி நெல் விதை, உயிர் உரங்களும் , தோட்டக்கலைத்துறை சார்பில் 4 பயனளிகளுக்கு தென்னங்கன்றுகள், பழசெடி தொகுப்பு என 13 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் செயற் பொறியாளர் ஊரக வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்களிடம் ஆலோசிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்றும் இதர பொதுவான கோரிக்கைகளை அரசு விதிமுறைகளுக்கு ஏற்ப தகுதியான மனுக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொது மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது என மாவட்ட ஆட்சியர் திரு.விஷ்ணு மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் குறித்து அமைக்கப்பட்டுள்ள அரங்கினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டார்.

பின்னர் சிறப்பாக பணியாற்றிய தூய்மை காவலர்களை கௌரவப்படுத்தியும் 2026-27 நிதியாண்டில் முழுமையாக வரி செலுத்தியமைக்காக மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசுகள் வழங்கி கௌரவித்தார்.

தொடர்ந்து, மகளிர் திட்டம் சார்பில் 7 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2.20 இலட்சம் மதிப்பில் வங்கிக் கடன் உதவியும், வேளாண்மை துறை சார்பில் 2 விவசாயிகளுக்கு தூயமல்லி நெல் விதை, உயிர் உரங்களும் , தோட்டக்கலைத்துறை சார்பில் 4 பயனளிகளுக்கு தென்னங்கன்றுகள், பழசெடி தொகுப்பு என 13 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, மகளிர் திட்டம் சார்பில் 7 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2.20 இலட்சம் மதிப்பில் வங்கிக் கடன் உதவியும், வேளாண்மை துறை சார்பில் 2 விவசாயிகளுக்கு தூயமல்லி நெல் விதை, உயிர் உரங்களும் , தோட்டக்கலைத்துறை சார்பில் 4 பயனளிகளுக்கு தென்னங்கன்றுகள், பழசெடி தொகுப்பு என 13 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் செயற் பொறியாளர் ஊரக வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்களிடம் ஆலோசிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்றும் இதர பொதுவான கோரிக்கைகளை அரசு விதிமுறைகளுக்கு ஏற்ப தகுதியான மனுக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொது மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது என மாவட்ட ஆட்சியர் திரு.விஷ்ணு மகாஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் குறித்து அமைக்கப்பட்டுள்ள அரங்கினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டார்.

பின்னர் சிறப்பாக பணியாற்றிய தூய்மை காவலர்களை கௌரவப்படுத்தியும் 2026-27 நிதியாண்டில் முழுமையாக வரி செலுத்தியமைக்காக மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசுகள் வழங்கி கௌரவித்த

சென்ட்ரல் கிரானிக்கிள் நாளிதழில் வெளியான வேலைவாய்ப்பு, பயிற்சி தொடர்பான செய்தி குறித்து, சமூக நீதி, அதிகாரமளித்தல் அமைச்சகம் விளக்கம்

சென்னை – 2 நவம்பர், 2026

போபாலில் இருந்து வெளிவரும் தி சென்ட்ரல் கிரானிக்கிள் நாளிதழில் அக்டோபர் 31, 2026 அன்று வெளியான ஒரு செய்தியில் இடம்பெற்றுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக, சமூக நீதி, அதிகாரமளித்தல் அமைச்சகம் உண்மை நிலையை வெளியிட்டு விளக்கம் அளித்துள்ளது.

மத்திய பிரதேச வேலைவாய்ப்பு, பயிற்சி கவுன்சில், வேலைவாய்ப்புத் தரவுகளைச் சரிபார்க்காமல், வேலைவாய்ப்புகளின் அடிப்படையில் கோடிக்கணக்கான பணத்தை வழங்கியுள்ளது என்ற குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது, ஆதாரமற்றது.

உண்மை நிலவர அறிக்கை, துல்லியமாகவும் உண்மைச் சூழலுடனும் வெளியிடப்படுகிறது.

பட்டியல் வகுப்பினர் மேம்பாட்டு ஆணையர் அலுவலகம், "பட்டியல் வகுப்பினருக்கான சிறப்பு மத்திய உதவி துணைத் திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக ரூ. 3,241.37 லட்சம் தொகையை அனுமதித்தது. இந்தத் தொகைக்கு எதிராக, 2021–22-ம் ஆண்டில் மத்திய பிரதேச வேலைவாய்ப்பு, பயிற்சி நிறுவனத்திற்கு மொத்தம் ரூ. 2,945.37 லட்சம் வழங்கப்பட்டது. இந்தத் தொகையில் ரூ. 1,296.00 லட்சம் (26 நவம்பர் 2021 தேதியிட்ட ஆணை எண் 4695-ன் படி), ரூ. 1,649.37 லட்சம் (25 மார்ச் 2022 தேதியிட்ட ஆணை எண் 10283-ன் படி) ஆகியவை அடங்கும்.

இந்தியப் புவியியல் ஆய்வு நிறுவனத்தின் தலைமை இயக்குநராக திரு தினேஷ் வி. கன்விர் பொறுப்பேற்பு

சென்னை – 2 நவம்பர், 2026

மத்திய அரசின் சுரங்க அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்தியப் புவியியல் ஆய்வு நிறுவனத்தின் 55-வது தலைமை இயக்குநராக திரு தினேஷ் விட்டல்ராவ் கன்விர் பொறுப்பேற்றுள்ளார். புவியியல் ஆய்வுகள், கனிம ஆய்வு, ஆகிய துறைகளில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள திரு தினேஷ் வி. கன்விர், தனது விரிவான அறிவியல், தொழில்நுட்ப, நிர்வாக அனுபவத்துடன் இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

திரு தினேஷ் வி. கன்விர், நாக்பூரில் உள்ள ஆர்.டி.எம்.என்.யு பல்கலைக்கழகத்தில் புவியியலில் தனது முதுகலைப் பட்டப்படிப்பை முடித்ததைத் தொடர்ந்து, 1994-ம் ஆண்டு ஜூலை 1-ம் தேதி இந்தியப் புவியியல் ஆய்வுத் துறையில் இணைந்தார். 32 ஆண்டுகளுக்கும் மேலான தனது பணிக்காலத்தில், அவர் இந்தியப் புவியியல் ஆய்வுத் துறையின் மத்திய மண்டலம், வடகிழக்கு மண்டலம், வடக்கு மண்டலம் முழுவதும் பல்வேறு அறிவியல், தொழில்நுட்ப, நிர்வாகப் பதவிகளில் பணியாற்றியுள்ளார். தலைமை இயக்குநர் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு, அவர் நாக்பூரில் உள்ள மத்திய மண்டலத்தின் கூடுதல் தலைமை இயக்குநராகவும் துறைத் தலைவராகவும் பணியாற்றி வந்தார்,

தமிழ்நாடு தினத்தை முன்னிட்டு தமிழக மக்களுக்கு பிரதமர் வாழ்த்து

சென்னை – 2 நவம்பர், 2026

தமிழ்நாடு தினத்தை முன்னிட்டு தமிழ்நாட்டு மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று (01.11.2026) வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள கடின உழைப்பும், தொழில்முனைத் திறனும் கொண்ட மக்கள் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு மிகச்சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளனர் என்று திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். உற்பத்தி, வாகனங்கள், ஜவுளி போன்ற துறைகள் முதல் மின்னணுவியல், விண்வெளித் தொழில்நுட்பம், சுகாதாரம், வளர்ந்து வரும் தொழில்கள் வரை, புதுமை, சிறந்த திறன், தொழில் மேன்மை ஆகியவற்றின் மூலம் இந்த மாநிலம் தன்னைத் தனித்துவப்படுத்திக் கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் மக்கள் தங்களது கலாச்சார அடையாளத்திலும் மரபுகளிலும் மிகுந்த பெருமிதம் கொள்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் கலாச்சாரம் நமது தேசத்தின் நாகரிகப் பயணத்தை எண்ணற்ற வழிகளில் வளப்படுத்தியுள்ளது என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் நரேந்திர மோடி தமிழில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

"தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் இந்த சிறப்பான தமிழ்நாடு தினத்தில் மனம் நிறைந்த நல்வாழ்த்துகள்!

தொழில்முனைவோடு, கடின உழைப்பும் மிக்கவர்களாய் விளங்கும் தமிழ்நாட்டு மக்கள் இந்தியாவின் வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளனர். உற்பத்தித் துறை முதல் வாகனங்கள் மற்றும் ஜவுளித்துறை, மின்னணுவியல், விண்வெளி தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் வளர்ந்துவரும் தொழில்துறைகள் வரை, தமிழகம் தனித்துவமிக்க கண்டுபிடிப்பு, திறன் மற்றும் தொழில்துறை சிறப்புகளை தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்குகிறது.

ஹரியானா மாநிலத்தின் 60-வது நிறுவன தினம் - குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்பு

சென்னை – 2 நவம்பர், 2026

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று (நவம்பர் 1, 2026) ஹரியானா மாநிலம் உருவாக்கப்பட்டதன் 60-வது ஆண்டு விழாவான 'ஹரக் ஜெயந்தி' கொண்டாட்ட நிகழ்ச்சிகளில், ஹரியானாவின் குருக்ஷேத்ராவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய குடியரசுத் தலைவர், இந்தியாவின் முன்னேற்றப் பயணத்தின் பல்வேறு பரிமாணங்களுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை ஆற்றிய ஹரியானா மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். பகவான் கிருஷ்ணரின் தன்னலமற்ற செயலின் நித்திய செய்தியை உலகம் முழுவதும் பரப்பிய இந்த மண், நவீன யுகத்தில் மனித சாதனைகளின் எண்ணற்ற மைல்கற்களையும் அமைத்துள்ளது என்று அவர் கூறினார்.

ஹரியானா மக்கள் சுதந்திரப் போராட்டம் முதல் சமூக மாற்றம், ஜனநாயகம், இலக்கியம், அறிவியல் வரை பல்வேறு துறைகளில் அர்த்தமுள்ள பங்களிப்புகளை வழங்கியுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த 10 ஆண்டுகளில், ஹரியானா மாநிலம், மகளிருக்கு அதிகாரமளித்தலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

இந்திய விளையாட்டு வரலாற்றில், ஹரியானாவைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மதிப்புமிக்க சர்வதேச போட்டிகளில் அபாரமான வெற்றிகளைப் பெற்றுள்ளனர் என்று குடியரசுத் தலைவர் கூறினார்.

விளையாட்டுத் துறையில் தங்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளால் தேசத்திற்குப் பெருமை சேர்த்துள்ள ஹரியானாவின் மகள்களை அவர் பாராட்டினார்.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் ஹரியானா புதிய உயரங்களை எட்டி வருகிறது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

குருக்ஷேத்திரத்தில் சுவாமி ஷ்ரத்தானந்த்தின் நினைவு நூற்றாண்டு நிகழ்வு - குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்பு

சென்னை – 2 நவம்பர், 2026

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று (நவம்பர் 1, 2026) ஹரியானாவின் குருக்ஷேத்திரத்தில் சுவாமி ஷ்ரத்தானந்த்தின் தியாக நினைவு நூற்றாண்டு நிகழ்வில் (பலிதான் சதாப்தி சமரோ) பங்கேற்றார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத் தலைவர், சுவாமி ஸ்ரத்தானந்த்தின் தியாகத்தின் 100-வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவருக்கு அஞ்சலி செலுத்துவதாக கூறினார். அவரது வாழ்க்கைப் பயணம் உத்வேகம் அளிப்பதாக குடியரசுத் தலைவர் கூறினார்.

சுவாமி ஸ்ரத்தானந்த் தமது வாழ்நாளை வேதங்களின் சேவைக்கும் சமூக மேம்பாட்டிற்கும் அர்ப்பணித்தார் என்று குடியரசுத் தலைவர் கூறினார். சமூக ஒற்றுமையின் வலுவான ஆதரவாளராக இருந்தார் என்று குடியரசுத் தலைவர் கூறினார்.

தீண்டாமை எனும் களங்கத்தை ஒழிப்பதும், ஒடுக்கப்பட்ட மக்களை மேம்படுத்துவதும் இந்தியாவின் முன்னேற்றத்திற்கான மிக அத்தியாவசியமான படிகள் என்று சுவாமி ஸ்ரத்தானந்த் உறுதியாக நம்பினார் என குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

சுவாமி ஸ்ரத்தானந்த் குருகுலக் கல்வி முறைக்குப் புத்துயிர் அளித்து அதை வலுப்படுத்தினார் என்று குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார். இது இந்தியக் கல்வி, கலாச்சாரத் துறைக்குப் புத்துயிர் அளித்தது என அவர் கூறினார்.

சுவாமி ஸ்ரத்தானந்த்தின் தியாக நூற்றாண்டு விழாவானது, அவரது எழுச்சியூட்டும் வாழ்க்கை, கல்வி, சமூகத் தத்துவம், தேசத்திற்கான அவரது அர்ப்பணிப்பு, தியாகம் ஆகியவற்றிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக அமைகிறது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

நாடாளுமன்றம், மாநில/யூனியன் பிரதேச சட்டமன்றங்களின் பொதுக் கணக்குக் குழு தலைவர்கள் மாநாடு: திருவனந்தபுரத்தில் நவம்பர் 3-ம் தேதி தொடங்கி வைக்கிறார் மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா

சென்னை – 2 நவம்பர், 2026

நாடாளுமன்றம், மாநில/யூனியன் பிரதேச சட்டமன்றங்களின் பொதுக் கணக்குக் குழுக்களின் தலைவர்கள் மாநாட்டை, மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா அவர்கள், 2026 நவம்பர் 3 அன்று கேரளத்தின் திருவனந்தபுரத்தில் தொடங்கி வைக்கிறார்.

தொடக்க அமர்வில் கேரள முதலமைச்சர் திரு வி.டி.சதீசன் கலந்து கொள்கிறார். மாநிலங்களவைத் துணைத் தலைவர் திரு ஹரிவன்ஷ் உள்ளிட்டோர் இதில் உரையாற்றுகின்றனர்.

நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு கே.சி. வேணுகோபால் வரவேற்புரை ஆற்றுகிறார். நாடாளுமன்றம், மாநில/யூனியன் பிரதேச சட்டமன்றங்களின் பொதுக் கணக்குக் குழுக்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் இவ்மாநாட்டில் பங்கேற்பார்கள்.

இரண்டு நாள் மாநாட்டில், 'தணிக்கை, பொறுப்புணர்வு, நல்லாட்சி – பொதுக் கணக்குக் குழுவின் வளர்ந்து வரும் பங்கு' என்ற கருப்பொருளின் அடிப்படையில் விவாதங்கள் இடம்பெறும். இந்த விவாதங்கள், அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கும், சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக்கொள்வதற்கும், பொதுச் செலவினங்கள் மீதான சட்டரீதியான மேற்பார்வையை உறுதி செய்வதிலும், ஆளுகையில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதிலும் பொதுக் கணக்குக் குழுக்களின் பங்கை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகளை ஆராய்வதற்கும் ஒரு முக்கிய தளத்தை வழங்கும்.

2026 நவம்பர் 4, புதன்கிழமை அன்று, மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா உரையாற்றும் நிறைவு அமர்வுடன் இந்த மாநாடு நிறைவடையும்.